## தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

## செய்தி குறிப்பு

சமீபகாலமாக கோவில்களில் நடைபெறும் தேர்த்திருவிழாக்களில் மின்கம்பித் தொடர்களில் தேர் எதிர்பாராதவிதமாக தொடர்பு கொள்ள நேரிட்டு அதனால் துறைசாராத மின்விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை அறிந்து தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மிகவும் வருந்துகிறது. இத்தகைய விபத்துக்களை தடுத்திட பொதுமக்கள் மற்றும் கோவில் திருவிழா நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் விழா நடப்பதை முன்னதாகவே அந்தந்த பகுதியில் உள்ள பகுதி அலுவலகம்/உதவி கோட்டம்/கோட்டம்/வட்ட அலுவலலங்களுக்கு தெரிவித்தால் விழா நடக்கும் பகுதியில் குறுக்கே அல்லது அதன் வழியாகச் செல்லும் மின் பாதையில் மின்னோட்டத்தினை நிறுத்தி செயலிழக்க செய்வதன் மூலம் விபத்தினை தடுத்திட இயலும். இத்தகைய விபத்துகளை தடுக்க தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தங்களின் முழு ஒத்துழைப்பை நாடுகிறது.